*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 536/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.மலர்க்கொடி க/பெ. மணி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.07.2026.**

துவக்க நேரம் 03.19 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது அரசநத்தம் கிராமத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 3-1/2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எங்கள் ஊரில் நடுவீதியில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள கடைக்கு சென்றேன்.

2) அப்பொழுது அங்கு வெள்ளையன், பிரபு, சக்திவேல், மகாலட்சுமி ஆகியோர்கள் அடித்துக்கொண்டிருந்தார்கள். வெள்ளையன் என்பவர் அவர் மகன் சக்திவேலுக்கு போன் செய்து, ஏய் வாடா இங்க, பிரபுவை கொல்லனுன்டா என்று கூப்பிட்டார். அப்பொழுது அங்கு வந்த வெள்ளையனின் மனைவி மகாலட்சுமி என்பவர் குச்சியை எடுத்துவந்து, பிரபுவின் வலது கையிலும், தலையிலும் அடித்துவிட்டார்.

3) சக்திவேல் என்பவர் ஒரு கட்டைகுச்சியையும், வெள்ளையன் என்பவர் இரும்பு கம்பியையும் எடுத்துவந்து பிரபுவின் இடதுகையில் அடித்ததில் பிரபுவின் இடதுகையில் கிராக்ஆகிவிட்டது. மேலும் சக்திவேலும், வெள்ளையனும் சேர்ந்து, பிரபுவை பார்த்து உன்னை என்னைக்காயிருந்தாலும் கொல்லாமல்விடமாட்டேன் என்று சொன்னார்கள்.

4) அதன் பிறகு பிரபுவின் அம்மா, அப்பா ஆகிய இருவரும் வந்து, அடிபட்ட பிரபுவை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும், குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணையின் வாய்ப்பு முடித்துவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 03.27 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.06 18:50:39 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 536/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.பெரியசாமி த/பெ. தங்கவேல்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.07.2026.**

துவக்க நேரம் 03.28 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது நாகியம்பட்டியில் கிராமத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் பிரபு, எனது மகன் ஆவார். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 3-1/2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 08.00 மணிக்கு என் மருமகள், எனக்கு போன் செய்து வெள்ளையன், வெள்ளையன் மகன் சக்திவேல், வெள்ளையன் மனைவி மகா ஆகியோர்கள், பிரபுவை அடித்துவிட்டதாக சொன்னார்.

2) ஏம்மா, பிரபுவை அவங்க அடிச்சாங்க என்று கேட்டதற்கு, இதற்கு முன்பாக நடந்த உள்ளாட்சி மன்ற தேர்தலில் எனது மகன் வார்டு உறுப்பினராக இருந்தார், அதற்கு முன்பாக வெள்ளையன் மனைவி மகாலட்சுமி என்பவர் வார்டு உறுப்பினராக இருந்தார், மேற்படி மகாலட்சுமி என்பவர் வார்டு உறுப்பினராக இருந்த காலகட்டத்தில் நடந்த குளறுபடிகளை, எனது மகன் கண்டுபிடித்ததால் அந்த முன்விரோததை மனதில் வைத்துக்கொண்டு எனது மகனை, மேற்படி எதிரிகள் அடித்துவிட்டதாக என்னிடம் சொன்னார்.

3) மேற்படி வெள்ளையனின் மனைவியான மகாலட்சுமி என்பவர், ஊராட்சிமன்ற துணைத்தலைவராக இருந்தபொழுது பஞ்சாயத்திற்கு

சொந்தமான அரசு புறம்போக்கு இடத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்ததை, எனது மகன் கேட்டதற்கு, அந்த பகையை மனத்தில் வைத்துக்கொண்டு, எதிரிகள் அனைவரும், எனது மகனை அடித்துள்ளதை கேள்விபட்டு, நான் உடனே அரசநத்தத்திற்கு வந்து பார்த்தபொழுது, மேற்படி எதிரிகள் அடித்துபோட்டுவிட்டு சென்றுவிட்டார்கள், அடிபட்டு மயங்கிய நிலையில் கிடந்த எனது மகனை 108 ஆம்புலன்சை போன் செய்து வரவழைத்து, ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச்சென்று சேர்த்தேன்.

4) மருத்துவமனையில், எனது மகனை பரிசோதித்த மருத்துவர் எனது மகன் இடது கை கட்டாகிவிட்டது என்று சொல்லி, ஆப்பரேசன்தான் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும், குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணையின் வாய்ப்பு முடித்துவைக்கப்படுகிறது.

முடிவு நேரம் 03.39 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.06 18:50:47 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 536/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-8)***

*Name / Father's Name:* ***திரு.குமரேசன் த/பெ. பழனிவேல்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06.07.2026.**

துவக்க நேரம் 03.40 A.N

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரசநத்தம் கிராமத்தில் குடியிருந்து, போர்வண்டியில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2-3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான், எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவிலுக்கு முன்பு இருந்தபொழுது அங்கு வந்த மல்லியகரை போலிசார், அதற்கு முந்தைய நாள் அந்த இடத்தில் பிரபு என்பவருக்கும், வெள்ளையன் குடும்பத்திற்கும் இடையே நடந்த சண்டை குறித்து என்னிடம் விசாரித்து, என் முன்பாக படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்துகள் என்னுடையதுதான். **(பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்துகள் மட்டும் முறையே அ.த.சா.ஆ. மற்றும் அ.த.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள், எனது ஊரைச்சேர்ந்தவர்களா என்றால் ஆமாம். கடந்த 05.10.2022 ம் தேதி பிரபு என்பவருக்கும், வெள்ளையன் குடும்பத்திற்கும் இடையே சண்டை நடந்ததாக கேள்விபட்டேன். அது சம்மந்தமாக கடந்த 06.10.2022 ம் தேதி மதியம் 03.15 மணிக்கு போலிசார், சம்பவயிடத்திற்கு வந்து என் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள் என்றும், மேலும் என் முன்னிலையில் சம்பவயிடத்திலிருந்து தடி ஒன்றை கைப்பற்றினார்கள் என்றும், அவ்வாறு போலிசார் தயார் செய்த மேற்படி ஆவணங்களில் நானும், செல்வக்குமார் என்பவரும் சாட்சியாக இருந்த கையெழுத்து செய்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான், வெள்ளைத்தாளில்தான் கையெழுத்துகள் போட்டேனா என்றால் ஆமாம். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் நான், வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். என் முன்பாக போலிசார் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம், போலிசார் எத்தனை கையெழுத்துகள் வாங்கினார்கள் என்றால் இரண்டு கையெழுத்துகள் வாங்கினார்கள். போலிசார் மேற்படி இரண்டு கையெழுத்துகளை எதற்காக என்னிடம் வாங்கினார்கள் என்றால் அங்கு வந்து விசாரித்ததற்காக என்று சொல்லி வாங்கினார்கள். நடந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 03.52 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.06 18:50:55 +0530

Judicial Magistrate No.2, Attur.